[28th March 1964

1963-ல் கன்னியாகுமரி மாவட்டத்தில் மீன் பிடிக்கும் தொழில் அபிவிருத்திக்காக என்ன நடவடிக்கைகள் எடுக்கப் பட்டன ?

கனம் திரு. கோ. பூவராகன் : சபையில் ஓர் அறிக்கை* வைக்கப் பட்டுள்ளது.

திரு. து. ப. அழகமுத்து : "மீன்பிடித் துறைமுகங்கள்" என்னும் தலைப்பில், "குளச்சல் பகுதியில் இந்தியக் கப்பற் படையினர் தங்கள் சர்வே வேலையை முடித்துவிட்டனர். இந்த சர்வேயின் அடிப்படையில், பொதுப் பணித் துறையினர் ரூ. 126 லட்சம் செலவில் குளச்சலில் மீன்பிடித் துறைமுகத்திற்கான பூர்வாங்க வரைப்படங்களையும், மதிப்பீடுகளையும் தயாரித் துள்ளனர்" என்று பதிலில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த வேலை எப்பொழுது ஆரம்பிக்கப்படும் ?

கனம் திரு. கோ. பூவராகன் : பரிசீலனை முடிந்து இப்பொழுது எஸ்டிமேட் தயாரிக்கிறார்கள். இதற்கு அன்னியச் செலாவணி வேண்டியிருக்கிறது. அதற்கு மத்திய அரசாங்கத்தைக் கோரி யிருக்கிறோம். அது கிடைத்தவுடன் ஆரம்பிக்கப்படும்.

அழகியபாண்டியபுரம் அரிசன காலனி.

*422. **கேள்வி—திரு. ஆர். எஸ். ஆறுமுகம்** : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா :—

(அ) நெல்லை தாலூகா அழகியபாண்டியபுரம் அரிசனங் களின் காலனிக்கு நெல்லை—சங்கரன்கோவில் ரோடிலிருந்து ஓர் இணைப்பு பாதையும் ஒரு கல்வர்ட்டும் அமைப்பதற்கு அரிசன நிதியிலிருந்து பணம் ஒதுக்கப்பட்டது உண்மையா ?

(இ) ஆமெனில், மேற்படி வேலைகள் எப்போது பூர்த்தி யாகும் ?

THE HON. SRI P. KAKKAN : (a) Yes. The Collector of Tirunelveli first sanctioned the execution of the work from the Harijan Welfare funds. Subsequently on finding that the expenditure has to be met from Village Works Grant, he transferred the work to the Commissioner, Panchayat Union, Manoor for execution from the Village Works Grant.

(b) The work is expected to be completed before the end of this financial year.

கனம் திரு. பூ. கக்கன் : ஆம். திருநெல்வேலிக் கலெக்டர் முதலில் இந்த வேலைகளை ஹரிஜன நல நிதியிலிருந்து நிறை வேற்ற அனுமதி வழங்கினார். ஆனால் பின்னர் அந்த வேலைக்குரிய செலவு, கிராமப்பணிகள் மானியத்திலிருந்து செய்யப்பட வேண்டுமென்று தெரிந்த பிறகு அதை அவ்வாறே நிறை வேற்ற மானூர் பஞ்சாயத்து யூனியன் கமிஷனருக்கு மாற்றி விட்டார்.

---

* 571–576 ம் பக்கங்களில் முதலாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

28th March 1964]

(இ) இந்த வேலைகள் நிதி ஆண்டின் இறுதிக்குள் பூர்த்தியடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. ஆர். எஸ். ஆறுமுகம்: மானூர் பஞ்சாயத்து யூனியனிலிருந்து அந்த வேலையைச் செய்து முடிப்பதாகச் சம்மதித்து ஏதாவது எழுதியிருக்கிறார்களா?

கனம் திரு. பூ. கக்கன்: அந்தத் தகவல் என்னிடம் இப்பொழுது இல்லை.

அறந்தாங்கி பஞ்சாயத்துக் கூட்டுமன்றத்திற்குப் புதிய கட்டிடம்.

*423 **கேள்வி.—திரு. ஆ. துரையரசன்:** கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

அறந்தாங்கி பஞ்சாயத்துக் கூட்டுமன்றத்திற்குப் புதிய கட்டிடம் கட்டும் உத்தேசம் உண்டா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: ஆம்.

Consumers' Co-operative Societies.

*424 Q.—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Food be pleased to state:

(a) the progress made so far in implementing the scheme of developing the Consumers' Co-operative for the supply of consumer goods at fair prices; and

(b) the number of fair price shops now functioning in each important city, under this scheme?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: சபையில் [a] அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

பயறு மூட்டைகளில் நஞ்சு கலக்கப்படுதல்.

*425 **கேள்வி.—திரு. செ. மாதவன்:** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1963-ம் ஆண்டு எப்ரல் மாதம் வடநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப் பட்ட பயறு மூட்டைகள் மதுரை மாவட்டம் திண்டுக்கல் நகரத்திலும் இராமநாதபுரம் மாவட்டம் இராசாபாளையத்திலும் விற்பனை செய்யப்பட்டபோது அதில் நஞ்சு கலக்கப்பட்டிருந்தது என்பது உண்மையா?

(இ) இதுபற்றி மதுரை மாவட்ட கலெக்டர் எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ), (இ) பி.எச்.சி. பவுடர் (B.H.C. Powder) கலந்திருப்பதாகச் சந்தேகிக்கப் பட்ட சில பயறு மூட்டைகள் திண்டுக்கல்லில் வந்து இறங்கின. அத்தகைய பயறு மூட்டைகள் ராஜபாளையத்தில் வந்திறங்கிய

---

[a] 577–578 ம் பக்கங்களில் இரண்டாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.